தந்திருக்கும் தி.மு.க. உறுப்பினர்கள், எச்சரிக்கையுடன் செயல்படும்படி எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

இதற்கு மேலும் இவ்வாறு நடந்துகொண்டால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இதற்கு மேலும், நீங்கள் நின்று கொண்டிருந்தால், நான் உங்களை வெளியேற்ற வேண்டி வரும். (குறுக்கீடு) அவைக் காவலர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜெ. அன்பழகன் அவர்களையும், திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களையும் அவையைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவையின் நேரத்தை வீணடிக்கிறீர்கள். (குறுக்கீடு) அவையை நடத்தவிடாமல் குந்தகம் செய்கிறீர்கள். ஆகவேதான், உங்களை அவையைவிட்டு நீக்கி இருக்கிறேன். (குறுக்கீடு) அவைக் காவலர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவனஈர்ப்பு (குறுக்கீடு) அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

(உறுப்பினர்கள் திரு. ஜெ. அன்பழகன் மற்றும் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

5. கவன ஈர்ப்பு

ஒட்டப்பிடாரம் தொகுதி, மாப்பிள்ளையூரணியில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, மாப்பிள்ளையூரணி ஊராட்சி மற்றும் பல ஊராட்சிகளில்

2013 ஏப்ரல் 9] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தற்போது நிலவும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறை குறித்து" மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, கருங்குளம், திருவைகுண்டம் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் உள்ள தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த மாப்பிள்ளையூரணி கிராம ஊராட்சிப் பகுதி, கடற்கரையை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிப் பகுதியாகும். மேற்படி பகுதியில் உள்ளூர் குடிநீர் ஆதாரம்மூலம் குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் குடிநீர் வழங்குவது முறைப்படுத்தப்பட்டு, தற்போது தினசரி 10.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. மேலும், மாப்பிள்ளையூரணி ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு கோரம்பள்ளம் குளத்திலிருந்து மாப்பிள்ளையூரணி ஊராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்ட உருவாக்க கோட்டம், திருநெல்வேலி மூலம் மாப்பிள்ளையூரணி ஊராட்சிப் பகுதிகள் மற்றும் மேற்படி ஊராட்சியினைச் சார்ந்த 1,196 சுனாமி குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க ரூ.25.10 கோடியில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3. ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலிருந்து புதிய கைப் பம்புகள் அமைக்க ரூ.7.50 இலட்சமும், பழுதடைந்த ஆழ்துளைக் கிணறுகளை சீரமைக்க ரூ.8.89 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.16.39 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளவும், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய கைப் பம்புகள் அமைக்க ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிலும், குடிநீர்த் திட்டப் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சிப் பகுதிகளில் தற்சமயம் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள இதர ஊராட்சிப் பகுதிகளிலும் உள்ளூர் நீர் ஆதாரங்கள்மூலம் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள இதர ஊராட்சிப் பகுதிகளிலும் உள்ளூர் நீர் ஆதாரங்கள்மூலம் குடிநீர்த் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

4. கோடைக் காலங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படவுள்ள பகுதிகளைக் கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்/மாநகராட்சி ஆணையாளர்/இணை இயக்குநர்/உதவி ஆட்சியர்/உதவி இயக்குநர் நிலை அலுவலர்களை உள்ளடக்கி 18 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி மண்டல அலுவலர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகின்ற/ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் தேவையான குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைகள் பொய்த்துவிட்ட நிலையில், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களில் கடுமையான வறட்சி நிலவுகின்றது. அதுவும்

2013 ஏப்ரல் 9] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

குறிப்பாக, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒரு பேரூராட்சியாகவோ, நகராட்சியாகவோகூட இல்லாத, அனைத்தும் கிராமங்களை மட்டுமே உள்ளடக்கிய ஒரு சட்டமன்றத் தொகுதி ஆகும். அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பல கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, 13 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுகின்றன. ஆனால், அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் பல வருடங்களுக்கு முன்பு, ஏறக்குறைய 20, 25 வருடங்களுக்கு முன்பு கொண்டுவரப்பட்டவை. 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்; ஏறக்குறைய 63 குடியிருப்புகள் இருக்கின்றன.

பிற்பகல் 12-25

எனவே, தற்பொழுது மேலமங்கலக்குறிச்சி என்ற இடத்திலேயிருந்து கொண்டுவரப்படுகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக சராசரியாக தினமும் 4 இலட்சம் லிட்டர் முதல் 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது. இதன்மூலமாக அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு 15 நாள் முதல் 21 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கிராமத்தினுடைய வளர்ந்திருக்கக்கூடிய இன்றைய மக்கள்தொகையைக் கணக்கிலே கொண்டும், அதேபோல அந்தத் தொகுதியிலே ஏற்கெனவே இருந்து வரக்கூடிய 13 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் மறு ஆய்வு செய்தும், இந்தப் பகுதி மக்களுக்கு அடுத்த 25 ஆண்டு காலம், 30 ஆண்டு காலத்திற்கு குடிநீர்த் தட்டுப்பாடே வராத வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா? ஏற்கெனவே இருக்கக்கூடிய திட்டங்களை புனரமைப்பு செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி கிராமத்தினுடைய மொத்த

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 9

மக்கள்தொகை 39,410 பேர். 59 ஊரகக் குடியிருப்புகளோடு இந்த கிராமம் செயல்பட்டு வருகிறது. இதிலே 35 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள 53 ஊரகக் குடியிருப்புகளுக்கு மாப்பிள்ளையூரணியிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் தாமிரபரணி ஆற்றில் மங்கலக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, மங்கலக்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி வழங்கப்படுவதில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவ்வூராட்சிப் பகுதியில் 28 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலமாக குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதோடு மட்டுமல்லாமல், மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்க தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிலுவைப்பட்டி என்னும் இடத்திலும், சங்கராப்பேரி என்னும் இடத்திலும் தலா ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, குடிநீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கோரம்பள்ளம் குளத்திலுள்ள ஐயனடைப்பு ஊராட்சிக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து குழாய்மூலம் குடிநீர் விநியோகம் செய்திட ஆரம்பப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், முள்ளக்காடு பகுதியிலுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஸ்டெர்லைட் ஆலைக்கு விநியோகம் செய்யப்பட்ட குடிநீர் தற்போது நிறுத்தப்பட்டதால், அதன் ஒரு பகுதியினை மாப்பிள்ளையூரணிக்கு மாற்றம் செய்து வழங்கிட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், குடிநீர்க் குழாய்கள் இல்லாத தெருக்களில் மற்ற பகுதிகளில் ஆய்வு செய்து லாரிகள்மூலமும் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஊராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையை அரசு முழுமையாக கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஊராட்சியிலுள்ள அனைத்துக் குடியிருப்புகள் மற்றும் சுனாமி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 1,196 வீடுகளுக்கு தாமிரபரணி

2013 ஏப்ரல் 9] [திரு. கே.பி. முனுசாமி]

ஆற்றில் திருவைகுண்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு விரிவான திட்ட மதிப்பீடு 25.10 கோடி ரூபாய் செலவாகுமென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு, அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுகின்றபோதெல்லாம் தம்முடைய ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் தேவை என்று கூறி இருக்கின்ற காரணத்தினால், ஒட்டப்பிடாரம் தொகுதி முழுவதுமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, கருங்குளம் மற்றும் திருவைகுண்டம் ஆகிய 4 ஊராட்சிகளுக்குட்பட்ட 78 கிராம ஊராட்சிகளில், 374 குக்கிராமங்கள் உள்ளன. ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள 282 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தற்பொழுது தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், ஆழ்துளைக் கிணற்று நீரினை ஆதாரமாகக் கொண்டு 2 கூட்டுக் குடிநீர்த் திட்டமும், ஆக 11 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தொகுதியிலுள்ள 24 கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு தனி மின் விசைத் திட்டம்மூலமும், 68 குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள்மூலம் தனி மின் விசைத் திட்டம்மூலமும் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட 78 கிராம ஊராட்சிகளில் 68 குடிநீர் ஆதாரங்கள், 30 திறந்தவெளிக் கிணறுகள், 312 சிறு மின் விசைத் திட்டம், 750 கைப் பம்புகள், 206 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 110 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இன்று மழையில்லாமல் வறட்சியாக இருக்கின்ற காரணத்தினால், போர்க்கால அடிப்படையில் இச்சட்டமன்றத் தொகுதியில் கிராம ஊராட்சி பொது நிதி, கிராம ஊராட்சி ஒன்றியப் பொது நிதி மற்றும் மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்களிடம் உள்ள உட்கட்டமைப்பு நிதி ஆகிய நிதியாதாரங்களிலிருந்து போதுமான குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல் நிதிநிலை அறிக்கையிலே எட்டு குடிநீர்த் திட்டங்களை அறிவித்தார்கள். அந்த எட்டு குடிநீர்த் திட்டங்களில் தூத்துக்குடி பகுதியில் இருக்கின்ற இந்தப் பகுதிகளுக்கு, அதாவது ஒட்டப்பிடாரம் தொகுதி மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 248 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், 180 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே நான் இந்தச் சட்டமன்றத்திலேயே எனது துறை மானியக் கோரிக்கை வருகின்றபோது கூறியதுபோல, அதில் 180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுவதுமாக நிதியாதாரம் ஏற்படுத்தப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் துவக்கப்பட இருக்கின்றன. அதன் அடிப்படையிலேயும் அந்தத் தொகுதி மக்களுக்கு முழுமையான அளவில் குடிநீர் கொடுப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு உள்ளாட்சித் துறையின்மூலமாக எடுத்து வரும் நடவடிக்கைகளை, எனது சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நான் பாராட்டுகிறேன், நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், இந்த மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் ஏறக்குறைய 60 குடியிருப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 40,000 மக்கள்தொகை என்று கணக்கெடுத்துக்

2013 ஏப்ரல் 9] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

கொண்டாலும்கூட, அந்தக் கிராம ஊராட்சிக்கு 25.10 கோடி ரூபாயில் ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

மேலமங்கலம்குறிச்சி என்ற இடத்திலிருந்துதான் மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்கு நான்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆனால், மேலமங்கலம்குறிச்சியில் எடுக்கப்படும் தண்ணீர் அதிகமான Iron content, இரும்புச் சத்து கொண்டதாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் அந்த நீரை விரும்புவதில்லை. அதே தொலைவில், 42 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வல்லநாடு அல்லது சீவலப்பேரியில் இருந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால் இன்னும் மிகப் பெரிய வரவேற்பு இருக்கும். எனவே, இது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக பல இடங்களிலிருந்து, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். எனவே, ஊராட்சிகள் மூலமாக தண்ணீர் வழங்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கக்கூடிய கொடியங்குளம் திட்டத்தின்படி கலப்பம்பட்டி, கைலாசபுரம் போன்ற பகுதிகளில் 13 கிராமத் திட்டங்கள் இருந்தாலும்கூட, ஒரு கிராமத்திற்கும் சென்றடையவில்லை. எனவே, பழையத் திட்டங்களைச் சீரமைக்க போர்க்கால அடிப்படையில் ஆவன செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விரிவான ஒரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். இப்போது ஒரு மகிழ்ச்சியான செய்தி

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 9

என்னவென்று சொன்னால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, அதிக நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 56 இலட்சம் ரூபாய் நிதியை குடிநீருக்காக வழங்கியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முழுவதுமாகப் பரிசீலனை செய்யப்படும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு நிலைகளில், பல்வேறு இடங்களில், பல்வேறு நீர் ஆதாரங்களைக்கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்பட்டு வருகிற குடிநீரை மாற்றி வேறொரு இடத்திற்கு எடுத்து அனுப்புவது என்பது சற்று இயலாத காரியமாகும். ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற iron content உள்ள தண்ணீராக இருக்கின்றது என்று அறிந்த காரணத்தினால்தான், அந்தப் பகுதிகளில் நல்ல தண்ணீர் வழங்க வேண்டுமென்பதற்காக 180 கோடி ரூபாய் திட்டத்தினை அறிவித்து, இப்போது அது நடைமுறைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013-2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன்.*